# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2008 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க,*
## இறைச்சிக்கடைக்காரர் (திருத்தச்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008,* பெப்புருவரி மாதம் *29* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2008 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க,*
## *இறைச்சிக்கடைக்காரர் (திருத்தச்) சட்டம்*

*[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 9/2008*

### *இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இறைச்சிக் கடைக்காரர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*சுருக்கப்பெயர்.*

*2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (272 ஆம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவானது அப்பிரி வின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :-*

*272 ஆம் அத்தியாயத்தின் 18 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

*"(1) முறையான அதிகாரியிடமிருந்து அனுமதியொன்று இன்றி எவையேனும் கால்நடையைக் கொல்லுதல் எவரேனும் ஆளிற்கு (உரிமமளிக்கப்படாத இறைச்சிக்கடைக்காரரொருவர்) சட்டமுறையானதாதல் ஆகாது :*

*ஆயினும், கருவுற்ற அல்லது பால்கொடுக்கும் பசுக்கள் எவையும் அனுமதி ஒன்றின் அதிகாரத்தின் கீழோ அல்லது அன்றியோ கொல்லப்படுதல் ஆகாது.".*

*3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

*(1) அதன் (1) ஆம் உட்பிரிவாக அப்பிரிவினை மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்*

(2) பின்வரும் புதிய பிரிவு மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப்பின்னர் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) பதினெட்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுகளை மீறி கருவுற்ற பசு அல்லது பால்கொடுக்கும் பசுவை கொல்கின்றவரான எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஐம்பதாயிரம் ரூபா குற்றப்பணத்திற்கும் அத்துடன் மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இரண்டிலொருவகையிலான மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.".

ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்